முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1623

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.03.2024**, சனிக்கிழமை

1. ஓங்காரமே ஞான சொரூபமே
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற
ஓங்காரன் என் அவதாரமே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 26 ம் நாள், 09.03.2024, சனிக்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் சக்தி பெருகவும்
ஆசிகொண்டு உலகமெங்கும் அரங்கன்
வாசியோக வல்லமைகொண்ட மாந்தர்களை
வசமாக்கி உலகெல்லாம் ஞானிகளாக
3. ஆகவே மாற்றம் கூடி இனிதே
ஐயமற அரங்கன் விரும்புகின்ற
வகையான ஞான உலகமாற்றம்
வையகம் கண்டிட ஆறுமுகன் யான்
4. யானுமே அரங்கனுக்கு சக்தி கூட்டி
உற்ற துணைபட நித்தம் நித்தம் ஞான பலமும்
உயர்வான உலகமாற்றம் நிகழும் மகா சக்தியும்
வல்லமை கொண்டு வழங்கி வருகின்றேன்
5. வருகவே அரங்கன் தொடர்பு கூட்டி
வையகத்தார் தீட்சை ஏற்றாலும்
ஏற்பதோடு தர்மத்தில் உதவி
இனிதே அன்னதான சேவை பங்களிப்பு கொண்டு தொடர்ந்தாலும்
6. தொடருகின்ற அன்பர்கட்கெல்லாம்
துரிதகதி ஆறுமுகன் யான்
இடரை வென்று அவர்களெல்லாம் இனிதே
இந்த பேருலகில் ஞான வான்களாக

7. ஆகவே மாற்றம் கண்டு அரங்கன் வழி
ஆற்றல் மிகு ஞானிகளாகவும் தேற்றம் கூடி
அகிலமாற்றம் புரிய அவரவர்க்கும்
ஆசியும் அனுமதியும் ஆறுமுகன் யான் அருளுவேன்

8. அருளவே அரங்கன் வழிவர
அற்புதம் அகிலத்தில் சடுதி நிகழும்
வரமென ஆறுமுகன் யான் விளம்பிய
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—